

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஜூலை 7, 2022 | புரட்சி 21 | முழக்கம் 25 | விலை: ரூ.3.00

## எங்கள் தத்துவ பிதாமகன் பெரியார் காட்டிய வழியில்

# எங்களை தனிநாடு கேட்கத் தள்ளி விடாதீர்கள்!

## எச்சரிக்கிறார் ஆ. இராசா

*திமுகவின் நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகள் மாநாடு 03.07.2022 அன்று காலை தொடங்கி நடைபெற்றது. மாநாட்டு நிகழ்வில், கருத்தரங்கில் 'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி' தலைப்பில் திமுக துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா பேச்சு.*

தனித் தமிழ்நாடு கோரிக்கையை கைவிட்டு விட்டு திராவிட முன்னேற்றக் கழகம் "மாநில சுயாட்சி" கொள்கைக்கு வந்து விட்டது. ஆனால் எங்கள் தத்துவத்தின் பிதாமகனாக இருக்கக் கூடிய தந்தை பெரியார் சாகும் வரை தனித் தமிழ்நாடு கேட்டார். அவர் இறப்பதற்கு மூன்று மாதத்திற்கு முன்னால், செப்டம்பர் 17ஆம் தேதி பெரியார் பிறந்தநாளன்று 'விடுதலை'யில் ஒரு அறிக்கை எழுதினார். அதில் கூறினார்:

"இந்தியாவில் இருக்கும் வரை இந்து மதம் என்னை சூத்திரனாக வைத்திருக்கும். இந்தியாவில் இருக்கும் வரை இந்து மதம் என்னை பஞ்சமனாக வைத்திருக்கும். அது மட்டுமில்லை இந்தியாவில் இருக்கும் வரை என்னுடைய தமிழனுக்கு பொருளாதார வளர்ச்சி வராது, உத்தியோகத்தில் பங்கு கிடைக்காது, எந்த ஏற்றமும் இருக்காது. எனவே நான் முடிவு செய்து விட்டேன். இன்றைக்கு கலைஞர் முதலமைச்சராக இருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகம் இதை ஏற்றுக் கொள்ளாது. அவர்கள் தங்களை மாநில சுயாட்சி என்று சுருக்கிக் கொண்டார்கள்" அய்யா எழுதுகிறார்.

இறுதியாக சொல்கிறார், "திராவிட முன்னேற்றக் கழகம் தன்னை மாநில சுயாட்சியோடு சுருக்கிக் கொண்டது, ஆனால் நான் சொல்கிறேன் பிரிவினை வேண்டும், தனித் தமிழ்நாடு வேண்டும், இளைஞர்களே முன் வாருங்கள், சுதந்திரத் தமிழ்நாடு தான் வேண்டும் என்று சட்டைப் பையில் பேட்ஜ் குத்திக் கொள்ளுங்கள்" என்று பெரியார் கூறினார்.

பெரியாரை முழுமையாக ஏற்றுக் கொண்ட நாங்கள் அதிலிருந்து விலகி ஜன நாயகத்திற்காக, இந்திய நாட்டின் ஒருமைப் பாட்டிற்காக சற்று விலகி, தந்தையையே ஒதுக்கி வைத்துவிட்டு இந்தியா வாழ்க என்று கூறினோம்; கூறிக் கொண்டும் இருக்கிறோம்.

நான் அமித்ஷாவிற்கும், பிரதமருக்கும் சொல்கிறேன், மெத்தப் பணிவன்போடு சொல்கிறேன், உங்களை பணிந்து கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன், இந்த மேடையிலே எங்களது தலைவரை வைத்துக் கொண்டு சொல்கிறேன், அண்ணா வழியில் பயணம் செய்கிறார் முதலமைச்சர், எங்களை பெரியார் வழிக்கு தள்ளிவிடாதீர்கள்.

தனிநாடு கேட்க எங்களை விட்டு விடாதீர்கள். மாநில சுயாட்சி தாருங்கள் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

*(உரையின் பிற்பகுதிகள் உள்ளே)*

## பா.ஜ.க. வேட்பாளரை பா.ம.க. ஆதரிப்பது சமூக நீதியா?

பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு திரௌபதி முர்மு என்பவர் நிறுத்தப்பட்டுள்ளார். அவர் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண். இது சமூக நீதியின் வெளிப்பாடு என்று சிலர் பேசத் துவங்கியிருக்கிறார்கள். இந்த வாதத்தில் நேர்மை இருக்கிறதா? நிச்சயமாக இல்லை. இதற்கு முன் குடியரசுத் தலைவராக நிறுத்தப்பட்டவரும் தலித் தான். ஆனால் அவர் குடியரசுத் தலைவராக இருந்து சமூக நீதியைக் காப்பாற்றினாரா? சொல்லப் போனால் கோவிலுக்குள் செல்லக்கூட அவரை சனாதானம் அனுமதிக்கவில்லை என்பது தான் சோகமான வரலாறு.

இந்தத் தேர்தலை எப்படிப் பார்க்க வேண்டும் என்று எதிர்க்கட்சி சார்பில் குடியரசுத் தலைவர் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள யஷ்வந்த் சின்ஹா கூறியுள்ள கருத்து மிகச் சரியானது, ஆழமானது.

இந்தியாவில் அரசியல் சட்டம் சீர்குலைக்கப்பட்டு, ஜனநாயகமும், மதச்சார்பின்மையும் படுகொலைக்குள்ளாக் கப்பட்டு, மதத்தை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கிற நேரத்தில், இதை எதிர்த்து நான் தொடர்ச்சியான போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறேன், அந்த போராட்டத்தின் ஒரு பகுதியாகத் தான் இந்த தேர்தல் களத்திலும் நிற்கிறேன், வெற்றி என்று வரலாம்; வராமலும் போகலாம். அது பற்றி கவலை இல்லை என்று மிகச் சரியாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

இதில் சமூக நீதியின் பார்வையை முன்னிறுத்துவது பச்சை சந்தர்ப்பவாத அரசியல்.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் மருத்துவர் அன்புமணி சமூக நீதியில் நம்பிக்கையுள்ள ஒவ்வொரு கட்சியும், பாஜகவின் வேட்பாளரைத் தான் ஆதரிக்க வேண்டும் என்று கூறியிருப்பது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. அவரது கட்சி வேண்டுமானால் ஆதரிக்கலாம் அது அவர்களது உரிமை.

ஆனால் சமூக நீதி பேசுகிற அத்தனைக் கட்சிகளும் என்று சொல்கிற போதுதான், நாம் பல கேள்விகளை எழுப்ப வேண்டி இருக்கிறது. பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியை உறுதி செய்வது தான் இந்த நாட்டில் சமூக நீதியா?

நாட்டில் மத வெறியைத் திணிப்பது, அரசியல் சட்டத்தை சீர் குலைப்பது, மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பது, இந்துராஷ்டிர ஆட்சியை நோக்கி நாட்டை இழுத்துச் செல்வது என்ற கொள்கைக் கொண்ட ஒருபட்சக் கட்சி பாஜக.

இந்த கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்டிருக்கிற ஒரு வேட்பாளருக்கு ஆதரவுக் கரம் நீட்டி, அந்த ஆட்சிக்கு வலிமை சேர்ப்பது தான் சமூக நீதி என்று பாட்டாளி மக்கள் கட்சி சொல்ல வருகிறதா?

இது சமூக நீதிக்கான தேர்தல் அல்ல. அப்படி இத் தேர்தலுக்கு பெயர் சூட்டுவது மக்களை ஏமாற்றுவது!

## பெரியாரின் கனவு நனவாகும் மாட்சி!

## உற்பத்தி சேவைத் துறைகளில் பணியாற்றும் பெண்களில் தமிழ் நாடே முதலிடம்

வேலைக்குப் போகும் பெண்களில் இந்தியாவில் தமிழ்நாடு முதல் மாநிலமாக வளர்ந்திருக்கிறது.

இந்தியா முழுமைக்கும் மொத்தம் 15.93 சதவீதப் பெண்கள் வேலைக்குப் போகும் நிலையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள், அதாவது 7.08 இலட்சம் பெண்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள்.

இரண்டா வது இடத்தில் கருநாடகம் இருந்தாலும் கருநாடகத்தைவிட மூன்று மடங்கு தமிழ்நாட்டில் அதிகம். 2017-2018ஆம் ஆண்டுக்கான தொழிற்சாலைகளுக்கான ஆண்டறிக்கை இத்தகவலைத் தெரிவித்துள்ளது. பெண்களையும் உள்ளடக்கிய தொழில் கொள்கைகளை தமிழ்நாடு அரசு உருவாக்கி அமுல்படுத்துவதே இதற்குக் காரணம்.

இரவு நேரப் பணிகளுக்கு அனுமதி; அதற்கான பாதுகாப்பு; உயர் தொழில் நுட்பத் திறன் பயிற்சி பயிற்சி; குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் (இதற்கு ஒன்றிய ஆட்சி 10 கோடி மான்யம் வழங்குகிறது); பெண்கள் தங்கும் விடுதி வசதிகள்; உதிரி பாகங்கள் தயாரிப்புப் பூங்கா போன்ற திட்டங்களால் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் தமிழ்நாட்டில் பெண்களின் பங்கேற்பு அதிகமாக இருக்கிறது.

ஜவுளி மற்றும் காலணி தாரிப்பு தொழிற்சாலைகளில் பெண்கள் அதிக எண்ணிக்கையில் பங்கேற்கிறார்கள். 2021 முதல் கோவை கிரீலேஸ்கர் நிறுவனம் பெண்களை மட்டுமே பணிக்கு அமர்த்தி வருகிறது. இந்த நிறுவனம் குஜராத்தில் தொடங்கிய தொழிற்சாலையில் 35 சதவீத பெண்களை பணிகளில் அமர்த்தி யுள்ளது. இராணிப்பேட்டை மின்சார இரு சக்கர வாகன உற்பத்தியில் 70 சதவீதம் பெண்களை பணிக்கு அமர்த்தியுள்ளது. எண்ணூர் அசோக் லேலாண்ட், கோவை பிரிக்கோல்ஸ், ஒரகடம் ராயல் என்பீல்டு, வல்லம் வடகல், 'சிஃஏடி' சென்னை உள்ளிட்ட பல நிறுவனங்கள் பெண்களுக்கே அதிக வேலை வாய்ப்புகளைத் தந்து வருகின்றன.

சேவைத் துறைகளான டி.சி.எஸ்., காக்னிசன்ட் இந்தியா, வால்மார்ட் உலக தொழில் நுட்ப மய்யம் உள்ளிட்ட ஏராளமான சேவைத் துறை தொழில் மய்யங்கள் பெண்களையே அதிக எண்ணிக்கையில் வேலையில் அமர்த்தி யுள்ளன.

'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?' என்று கேட்ட சமூகத்தில் பெரியார் இயக்கம் பெண்கள் உரிமைக்காக நடத்திய இயக்கத்துக்குக் கிடைத்த பெரும் வெற்றி இது.

தமிழ்நாடு 'பெரியார் மண்' என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

தகவல்: 'டைம்ஸ் ஆப் இந்தியா', ஜூலை 4, 2022

தலையங்கம்

## மொழி – மதம் குறித்த முதல்வரின் தெளிவான பார்வை

நியூயார்க் நகரில் நிகழும் வடஅமெரிக்க தமிழ்ச் சங்க மாநாட்டுக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் காணொளி வழியாக நிகழ்த்திய உரை மிகவும் ஆழமானது; குறிப்பிடத் தக்கது. மொழி – மதம் குறித்து அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் உரை அது.

மொழி – உலகம் முழுதும் வாழும் தமிழர்களை இணைக்கும் ஒரே கருவி என்று கூறியுள்ள முதலமைச்சர், தமிழர்கள் ஒற்றுமையை மதத்தின் அடிப்படையில் பிளவுபடுத்துவதை ஏற்க முடியாது. அத்தகைய முயற்சிகள் தீவிரம் பெற்று வருகின்றன என்று சுட்டிக்காட்டி எச்சரித்துள்ளார். மொழியின் பெருமை – இனப் பெருமை பேசுவது தவறு இல்லை. அத்தகைய வரலாறும் பெருமையும் நமக்கு இருக்கிறது. அந்த வரலாறு இல்லாதவர்களால் அதை சகித்துக் கொள்ள முடியவில்லை. திராவிட இயக்கம் நூற்றாண்டுகளைக் கடந்து நிற்கிறது. திராவிட மாடல் ஒரு கருத்தியல் கோட்பாடாக நாம் வளர்த்தெடுக்கிறோம். இதை எதிர்க்கிறவர்கள், கடந்த ஆயிரம் ஆண்டுகளாக எதிர்த்து வருவோர் தான்; அவர்கள் கற்பனைகளை வரலாறுகளாக எழுத முயலுகிறார்கள் என்றும் முதல்வர் எதிரிகளைத் துல்லியமாக அடையாளப்படுத்தியிருக்கிறார்.

தமிழ் மொழியை பெரியார் அணுகிய பார்வையை கொள்கை எதிரிகள் மலினமாக்கி திசை திருப்பி வருவதை வழக்கமான தந்திரமாக்கிக் கொண்டுள்ளனர்.

பெரியார் சொன்னார்: “தமிழும் ஒரு காலத்தில் உயர்ந்த மொழியாகவே இருந்தது. இன்று அது வடமொழிக் கலப்பாய், இடது கைபோல பிற்படுத்தப்பட்டு விட்டது. இந்நோய்க்கு முக்கிய காரணம் மதச்சார்புடையோரிடம் தமிழ் மொழி சிக்கிக் கொண்டது தான்” என்றார். (‘மொழி எழுத்து’ நூல்)

தமிழில் மதத்தைப் புகுத்தி தமிழர்களைப் பிளவுபடுத்திய நிலையில் மொழியை மதப்பிடியிலிருந்து பிரித்தெடுக்கும் இலக்கியங்களையும் மதப் பிடியில் சிக்கிடாத தொன்மை இலக்கியப் பெருமைகளையும் மக்களிடம் கொண்டு செல்லும் முயற்சிகளில் தி.மு.க. தொடக்கக் காலத்திலிருந்தே முனைப்புடன் செயல்பட்டது. பெரியாரைப் பொறுத்தவரை தமிழை இலக்கியத்துக்காக அல்லாமல், தமிழர்களுக்காக தாங்கிய தலைவர் மதப்பிளவு, ஜாதிப் பிளவுகளுக்கு எதிராக தமிழரைத் தாங்கும் வலிமையான இணைப்பாக தமிழ் வளர வேண்டும் என்பதே பெரியாரின் இலட்சியம். அதற்கு வலிமை சேர்ப்பதாகவே முதல்வர் மு.க. ஸ்டாலின் உரை அமைந்திருக்கிறது.

பெரியார், தமிழை அறிவியல் மொழியாக வளர்த்தெடுக்க வேண்டும் என்ற கவலை கொண்டிருந்தார். இப்போது தமிழ் கணினியில் அறிவியலில் மொழி பெயர்ப்புகளில் அறிவியல் நோக்கி முன்னேறி வருவதை கண்கூடாகவே பார்க்கிறோம். தமிழர்கள் மீது சுமத்தப்பட்ட மத அடையாளம் ஜாதிகளாகப் பிளவுபடுத்தியது. மத அடையாளத்தை அகற்றி மொழி அடையாளத்தின் கீழ் சமுதாயம் ஒன்றிணைய வேண்டும் என்று முதல்வர் கூறியிருக்கிறார். இதன் வழியாக தமிழை சமூகவியல் பார்வையில் அணுக முயல்கிறார். இது மிகச் சரியான பார்வை. அதேபோல் மொழி – சமூக நீதிக்கான கருவியாகவும் தமிழக அரசில் செயல்படத் தொடங்கியிருப்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். தமிழ்மொழி தெரியாத பிற மாநிலத்துக்காரர்கள் தமிழ்நாட்டு தமிழர்களின் வேலை வாய்ப்புகளைப் பறித்துக் கொண்டிருந்த நிலையில் தமிழ்நாட்டின் வேலை வாய்ப்பு நிறுவனங்கள் வழியாக வேலை தேடுவோர் கட்டாயம் தமிழ்த் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற சிறப்பான திட்டத்தை இப்போது தமிழக முதல்வர் அறிமுகப்படுத்தியுள்ளார்.

மொழியை சமூகம் மற்றும் சமூக நீதிப் பார்வையில் அணுகுவது என்பதே பெரியாரின் கருத்துக்கும் மத நம்பிக்கைகள் குறித்தும் முதல்வர் பேசிய கருத்துகளையும் குறிப்பிட்டாக வேண்டும். ஆட்சி எந்த ஒரு மதத்துக்கும் எதிரானது அல்ல. அவர்களின் நம்பிக்கைகளில் குறுக்கிடாது; அதே நேரத்தில் மதத்தின் அடிப்படையில் தமிழர்களை பிளவுபடுத்துவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என கூறியுள்ளார்.

தமிழ் சமூகத்தைப் பிளவுபடுத்தும் முதன்மை காரணியாக ஜாதி இருக்கிறது என்பதையும் அழுத்தம் திருத்தமாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். ‘திராவிடம்’ நிலத்தை, மொழியை, பண்பாட்டை அடையாளப்படுத்தி வந்த சொல்லாக இருந்தது. இன்று ஒரு அரசியல் கோட்பாடாக பரிணமித்துள்ளதைச் சுட்டிக்காட்டிய முதல்வர், அந்த சொல், இப்போது சமூகநீதி, சுயமரியாதை, சகோதரத்துவம், மானுடப்பற்று, மொழிப் பற்று, இன உரிமை, கூட்டாட்சி தத்துவம், மாநில சுயாட்சிகள் உள்ளடக்கிய ‘திராவிட மாடல்’ என்ற கோட்பாட்டு வடிவம் பெற்று அதையே இந்த ஆட்சியின் கொள்கையாக செயல்படுத்தி வருகிறோம் என்று பறைசாற்றியிருக்கிறார்.

பெரியாரின் கடவுள் – மத எதிர்ப்புக்கு அடிநாதமே ஜாதி எதிர்ப்பு தான். அந்த நம்பிக்கையை தகர்க்காத வரை மக்களை ‘சூத்திர–பஞ்சம’ இழிவுகளிலிருந்து மீட்க முடியாது என்ற உறுதியான முடிவே அவரை கடவுள் எதிர்ப்பை நோக்கி நகர்த்தியது.

கடவுள், மத எதிர்ப்புப் பரப்புரை செய்து கொண்டே ஜாதியை எதிர்த்த மத நம்பிக்கையாளர்களை நட்பு சக்தியாகவே பெரியார் அரவணைத்தார். குன்றக்குடி அடிகளார், வள்ளலார் போன்றோரை சான்றாகக் குறிப்பிடலாம். சிருங்கேரி மட சங்கராச்சாரி சந்திக்க அழைத்தபோது, அவரது வைதீக வெறி கருதி சந்திக்கவே மறுத்தார். அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் உரிமைக்கான அழுத்தமான குரல் அவரின் இறுதி மூச்சு அடங்கும் வரை ஒலித்தது. எனவே ஜாதிகளற்ற தமிழர், ஜாதிகளற்ற மதம் என்பதே மொழி – மதம் குறித்த வெகு மக்களுக்கான அணுகுமுறையாக இருக்க வேண்டும்.

இந்துத்துவா என்ற பெயருக்குள் வெகு மக்களைப் பிளவுபடுத்தும் வெறுப்பு அரசியல், அதற்குள் பதுங்கி நிற்கும் பார்ப்பனிய ‘வைதீகக்’ கோட்பாடு வெறிக்கு மாற்றாக மொழியையும், சமூக நீதியையும் தன்னாட்சி உரிமைகளையும் ஆயுதமாக தமிழகம் ஏந்தி நிற்கும் இதை ஆழமாக தெளிவுபடுத்தியிருக்கிறது, முதலமைச்சரின் உரை!

# வடலூர் வள்ளலார் சபை வைதீகத்துக்கு எதிரானது: உயர்நீதிமன்றத் தீர்ப்பு

வைதீக வேத மரபை எதிர்த்து வள்ளலார் உருவாக்கியது தான் வடலூர் சத்திய ஞான சபை. சத்திய ஞான சபையிலும் சிவன் சிலையை வைத்து அதை வைதீகத் தலமாக மாற்றுவதற்கான சதிச் செயலில் பார்ப்பனர்கள் ஈடுபட்டார்கள். குறிப்பாக சபாநாத ஒளி சிவாச்சாரியார் என்ற ஒரு வேத பண்டிதர், அங்கு சிவலிங்கம் போன்ற சிலைகளை வைத்து வழிபட துவங்கியபோது, 2006ஆம் ஆண்டு அதை எதிர்த்து, தொண்டர் குலப் பெருமான். என்ற ஒருவர் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கில், வைக்கப்பட்ட கோரிக்கையை பரிசீலிக்குமாறு அறநிலையத் துறையை விசாரிக்குமாறு நீதிமன்றம் கேட்டுக் கொண்டது. அப்போது அறநிலையத்துறை கொடுத்த விளக்கம் மிகவும் முக்கியமானது.

1882 ஆம் ஆண்டு வகுத்த வழிபாட்டு விதிகளின் படி, உருவ வழிபாடு வள்ளலார் சத்திய ஞான சபையில் கூடாது. ஒளி மட்டுமே ஏற்றப்பட வேண்டும். ‘அருட்பெரும் ஜோதி, தனிப் பெரும் கருணை’ என்ற தாரக மந்திரத்தை மட்டுமே ஒலிக்க வேண்டும். வேதம், இதிகாசம், புராணம், சைவம், வைணவம், வேதாந்தம், சித்தாந்தம், போன்ற மதம் சார்ந்த நடவடிக்கைகளில் இலட்சியம் வைக்க வேண்டாம் என்பதுதான் வள்ளலாரின் கருத்து. சத்தியஞான சபை வள்ளலாரால் உருவாக்கப்பட்டது. எனவே மேற்குறிப்பிட்ட எவற்றுக்கும் அங்கே இடமில்லை என்று அறநிலையத்துறை திட்டவட்டமாக அறிவித்தது. இதை எதிர்த்து சிவாச்சாரியார் உயர்நீதிமன்றம் சென்றார். 2010 ஆண்டு உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த சந்துரு இந்த வழக்கை விசாரித்து, ’வள்ளலார் உருவாக்கிய சத்தியஞான சபையில் உருவ வழிபாடு கூடாது என்று மிகச் சிறப்பான தீர்ப்பை வழங்கினார்.

அந்தத் தீர்ப்பை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் தான் அதாவது 2010 ஆம் ஆண்டு தொடரப்பட்ட வழக்கில் தான் 2022ஆம் ஆண்டு தீர்ப்பு வந்திருக்கிறது. உருவ வழிபாடு கூடாது என்று. வைதிகத்தை எதிர்த்து இந்து மதத்தில் பல இயக்கங்கள் உருவாகின. பல்வேறு கலகக் குரல்கள் எழுந்தன. அவை அனைத்தையும் வைதீக பார்ப்பனிய மதம், சனாதன தர்மம், வைதீக தர்மம், இந்து தர்மம் என்ற பெயரில் விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கிறது. அதே போலதான் வள்ளலார் வடலூர் சபையையும் விழுங்கி ஏப்பம் விட முயற்சித்தார்கள். ஆனால் அது நடக்காது என்று இப்போது 2022ஆம் ஆண்டில் வழக்கின் வழியாக உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது.

வடலூர் வள்ளலார் சபை அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் இல்லாமல் போயிருந்தால் அதை மீண்டும் வைதீகத்தின் கோவிலாக மாற்றி பார்ப்பனியத்தின் சடங்கிற்கு நிச்சயமாக உள்ளாக்கியிருப்பார்கள்.

கோவில்களை அறநிலையத்துறைப் பிடியின் கீழ் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கை வைப்பதற்கு முக்கிய காரணம், கோவில்களில் இன்றைக்கு நடத்தப்படுகிற சீர்திருத்தங்களை முற்றிலுமாக ஒழித்து, மீண்டும் வைதீக பார்ப்பனியப் பிடிக்குள் கொண்டு வர வேண்டும் என்பதைத்தான் இந்தத் தீர்ப்பின் வழியாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

# நுபுர் சர்மா வெறிப் பேச்சுக்கு வெளியுறவு அமைச்சர் ஆதரவு

நாடு முழுவதும் மதவெறியைப் பற்ற வைத்து, கலவரத்தை உருவாக்கிய பாஜகவின் முன்னாள் பேச்சாளர் நுபுர் சர்மா, தேசத்தின் முன்னால் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று, உச்சநீதிமன்றம் கண்டிப்பாக கூறியிருக்கிறது. இத்தனை கலவரங்களுக்கும் அந்த ஒரு பெண் தான் காரணம் என்று உச்சநீதிமன்றம் கூறியிருப்பதோடு, நாட்டில் நடைபெறுகிற வீடுகள் இடிப்பு, தீ வைப்பு கலவரம் என அத்தனைக்கும் காரணம், அவர் ஒருவர்தான் என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறது.

தன் மீது பல்வேறு நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகளை உச்சநீதிமன்றம் ஒன்றாக இணைத்து விசாரிக்க வேண்டும் என்று அவர் வைத்த கோரிக்கையையும், உச்சநீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது.

ஆனால், உச்சநீதிமன்றம் இவ்வளவு கடுமையான கருத்துக்களை தெரிவித்ததற்குப் பிறகும் கூட, நுபுர் சர்மா மீது பாஜக இதுவரை எந்த கண்டனத்தையும் தெரிவிக்கவில்லை. கைது செய்யவும் இல்லை.

இந்த நிலையில் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய் சங்கர், “முஸ்லிம் நாடுகள் இந்தப் பிரச்சனையை எதிர்மறையாக பிரச்சாரம் செய்கின்றன” என்று கூறினாரே தவிர நுபுர் சர்மாவை எதுவும் கண்டித்துக் கூறவில்லை. தேசிய பாதுகாப்பு துறை ஆலோசகர் அஜித் டோவல், “நுபுர் சர்மாவின் பேச்சு உலகளவில் இந்தியாவிற்கு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்றாலும், இஸ்லாமிய நாடுகள் இந்தியாவிற்கு எதிராக பொய்யான பிரச்சாரம் செய்கின்றனர் அந்த நாடுகளுக்கு நாம் விளக்கம் தர வேண்டிய அவசியமில்லை. அவர்களை சமாதானப்படுத்தத் தேவையுமில்லை” என்று அவர் கூறியிருக்கிறார். மோடியோ, அமித்ஷாவோ இது குறித்து வாய் திறக்கவே இல்லை.

தீர்ப்புக் கூறிய நீதிபதி சமூக வலைதளங்களில் தான் மிரட்டப்படுவதாகக் கூறுகிறார்.

நுபுர் சர்மா தேசத்தின் முன் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற நீதிபதி கருத்தைத் தீர்ப்பிலிருந்து அகற்றக் கோரி மனு போடுகிறது ஒன்றிய அரசு.

## நீதிமன்றங்களில் தமிழ் வர வேண்டும்!



நீதிமன்றங்களின் நடவடிக்கைகள் தமிழில் நடப்பதை விரைவு படுத்த வேண்டியது ஆட்சியாளர் கடமையாகும். அதற்கு முன்னணி வேலையாக , ஒவ்வொரு சட்டப் புத்தகத்தையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் பொறுப்பையும் செலவையும் ஆட்சியாளர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். தமிழ்ப் புலவர்களாய் உள்ள சட்ட நிபுணர்கள் தமிழ்நாட்டில் பலரிருக்கின்றனர். இவர்களைக் கொண்டு ஆட்சியாளர் இக்காரியத்தைச் சிறப்பாகவும் விரைவாகவும் செய்து முடிக்கலாம்.

இதேபோல் ஆட்சி நிர்வாகத் துறையிலும், இங்கிலீஷ் இன்றுள்ளது, போலவே தமிழும் இயங்க வேண்டுமானால், இங்கிலீஷ் படித்த தமிழ்ப் புலமைப் பட்டதாரிகளையெல்லாம் சர்க்கார் பணிமனைகளிலெல்லாம் ஏராளமாக நியமிக்க வேண்டும். இவர்களுக்குக் கொடுத்தவை போக மீதி இடங்களைத்தான் மற்ற பட்டதாரிகளுக்குக் கொடுக்க வேண்டும். நல்ல இங்கிலீஷ் படிப்புள்ள தமிழாசிரியர்களையும் சர்க்கார் பணிமனைகளில் பொறுப்புள்ள பதவிகளில் அமர்த்த வேண்டும்.

**‘விடுதலை’** 01.09.1956

## தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா விளக்கம்

# மாநில சுயாட்சியை ஏற்ற காங்கிரஸ், பிறகு சுதந்திர இந்தியாவில் கைவிட்டது ஏன்?



**இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கும் ஆலோசனைக்காக கிரிப்ஸ் குழு வந்தபோது அக் குழுவில் சுதந்திர இந்தியா கூட்டாட்சித் தத்துவத் துவமாக இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியது. காங்கிரஸ் குழுவில் இடம் பெற்ற மூன்று ஆலோசகர்களும் இஸ்லாமியர்கள் தான்.**

*நாமக்கல்லில் ஜூலை 3இல் உள்ளாட்சி பிரதிநிதிகள் மாநாட்டில் நிகழ்த்திய உரை:*

ஒரு நீண்ட தலைப்பை ஒரு குறுகிய நேரத்தில் உரையாற்ற வேண்டும் என்ற நெருக்கடியோடு உங்கள் முன்னால் நான் நிற்கின்றேன். ஒரு அரை நூற்றாண்டாக "மாநில சுயாட்சி"யைப் பேசுகின்ற ஒரு இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் இருந்து கொண்டு இருக்கிறது. இந்த நிகழ்ச்சியை இப்போது ஏன் நடத்த வேண்டும் ?

ஒரு மாதத்திற்கு முன்பாக இந்திய நாட்டின் பிரதமர் வந்தார். அவரை வைத்துக் கொண்டு ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் இப்படி பேச முடியுமா? என்று கூறுகிற அளவிற்கு நம்முடைய தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அன்றைக்கு பேசினார். அதன் சுருக்கம் இதுதான்.

"பிரதமர் அவர்களே தமிழ்நாட்டின் சார்பில் நாங்கள் உங்களுக்கு மொத்த வருமானத்தில் 10% தருகிறோம். வரி என்று எடுத்துக் கொண்டால் 6.5%. ஆனால் நீங்கள் எங்களுக்கு தருவதோ வெறும் 1.5% தான். இது கூட்டாட்சி தத்துவத்திற்கே எதிரானது. என்று அன்றைக்கு பிரதமர் முன் பேச திராணி உள்ள ஒரே முதலமைச்சர் என்பதை நிரூபித்துவிட்டு, இன்றைக்கு மாநில சுயாட்சி பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். இந்த மாநில சுயாட்சி யாருடைய சிந்தனையில் உருவான கரு?

1967ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு பேரறிஞர் அண்ணா டெல்லிக்கு செல்கிறார். மரியாதை நிமித்தமாக குடியரசுத் தலைவர், பிரதமரை சந்தித்துவிட்டு பத்திரிக்கையாளரை சந்திக்கிற போது கூறினார், "எனக்கு பிடித்த வாசகங்களிலே அம்பேத்கருடைய வாசகமும் ஒன்று. Democracy is not merely a form of government... It is essentially an attitude of respect and reverence towards fellowmen". ஜனநாயகம் என்பது ஓட்டு போட்டு ஒரு அரசாங்கத்தை தேர்ந் தெடுப்பது அல்ல. ஜனநாயகம் என்பது கடைசி மனிதனுக்கும் கொடுக்க வேண்டிய மரியாதையை இருக்கிற மதிப்பை கொண்டு போய் சேர்க்க வேண்டும். இது தனி மனிதர்களுக்கு மட்டும் அம்பேத்கர் கூறவில்லை. அவை மாநிலங் களுக்கும் பொருந்தும். 22க்கும் மேற்பட்ட மாநிலங்கள் இருக்கிறது. எங்களுக்கு மரியாதை இருப்பதாக, மதிப்பு இருப்பதாக நாங்கள் கருத வில்லை என்று கூறிவிட்டு, மேலும் அண்ணா கூறினார்,

"வரி வசூல், எங்களுக்கு வர வேண்டிய நிதிப் பங்கீடு, அதே போல அதிகாரப் பகிர்வு இந்த மூன்றிலும் தற்போதிருக்கிற அரசியல் சட்டத் தில் சொல்லப்பட்டிருப்பது எங்களுக்கு ஆரோக் கியமானதாக இல்லை. வேதனைக்குரியதாக இருக்கிறது" என்று அண்ணா கூறினார்.

அதன் பிறகு சென்னை வந்தார். அவர் நடத்திய பத்திரிக்கை "ஹோம் ரூல்". அந்த பத்திரிக்கையில் அண்ணா மரணத்திற்கு சில மாதங்களுக்கு முன்பு எழுதிய கடைசி கடிதம், "தம்பி நான் பதவிக்காக அலைகிறவன் அல்ல என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் காகிதத் திலே கூட்டாட்சி, ஆனால், அதிகாரம் பொருந்திய மத்திய ஆட்சி, அதிகாரம் பொருந் திய குடியரசின் கீழே நான் முதலமைச்சராக இருக்க விருப்பமில்லை" என்று எழுதியவர் பேரறிஞர் அண்ணா.

எனவே டெல்லி தொடங்கி ஹோம் ரூல் வரை மாநில சுயாட்சிக்கு ஒரு உருவத்தைக் கொடுத்தவர் அண்ணா. இன்னும் சொல்லப் போனால், "இந்தியா ஒரு நாடா. இப்போது ஒரு நாடு, அரசியல் சட்டம் வந்த பிறகு. இத்தனை தேசங்கள் இங்கே இருந்தது. இது ஒரு துணைக் கண்டம். வெவ்வேறு கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றின் ஒன்றியமாக இந்தியா இருக்கிறது." இதை முதன் முதலாக சொன்னவர் பேரறிஞர் அண்ணா. அவர் சொன்ன பிறகு தான் அந்த கருவை கலைஞர் கையிலே எடுத்தார். கலைஞர் சொன்ன கதை.

1974 இல் கலைஞர் எழுதினார், அதில் ஒரு கதையை சொன்னார், "நீண்ட காலம் ஒருவன் சிறையிலே இருந்து வெளியே வருகிறான். வெளியே வந்து விட்டோம், வெளிச்சம் கிடைத்து விட்டது என்று வீதிக்கு வருகிறான். மனைவி வரவேற்கிறாள், குழந்தை தாவி வருகிறது தந்தையை பார்க்க, தழுவ நினைக்கிறான் அப்போது தான் பார்க்கிறான், கையிலே விலங்கு இருக்கிறது. அதுவரை விலங்கு இருப்பது தெரியவில்லை. அப்படித்தான் இருக் கிறது சுயாட்சி. சுதந்திரம் கிடைத்துவிட்டது. ஆனால் மாநிலத்தை ஆட்சி செய்தால் பூட்டு போடப்பட் டிருக்கிறது. அந்த விலங்கை எப்போது உடைக்கப் போகிறோம்" என்று அன்றைக்கு கலைஞர் எழுதினார். அப்படித் தான் ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவிக் காமல் மாநில சுயாட்சிக்கான தீர்மானத்தை 1974 இல் கலைஞர் எழுதினார்.

எழுதியது மட்டுமில்லாமல் சட்டமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றி அன்றைக்கு பிரதமராக இருந்த இந்திரா காந்திக்கும் அனுப்பினார். அதைப் பெற்றுக் கொண்ட இந்திரா காந்தி இதை நாம் முழுமையாக சேர்ந்து ஆராய்வோம் என்று பதில் கடிதம் எழுதினார். மாநில சுயாட்சியின் கரு பேரறிஞர் அண்ணா. அந்த கருவை உருவமாக மாற்றிய பெருமை கலைஞருக்கு உண்டு. 1974 இல் கொண்டு வந்த உருவத்திற்கு இன்று வரை உயிரில்லை.

இந்த உள்ளாட்சி பிரதிநிதிகள் மாநாட்டில் ஏன் தலைவர் எனக்கு இந்த தலைப்பை கொடுத் தார். 73ஆவது முறையாக அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது. அதில் தான் 'பஞ்சாயத்து ராஜ்' சட்டம் வந்தது. அதில், 'இந்த நாட்டில் இருக்கிற ஒவ்வொரு நகராட்சியும், ஒவ்வொரு ஊராட்சியும், ஒவ்வொரு பஞ்சாயத் தும் 'சின்ன குடியரசு' (Little Republic). **அதனால் தான் உங்களுக்கெல்லாம் காசோலையில் கையெழுத்து போடுகிற அதிகாரம் இருக் கிறது. இங்கே இருக்கிற அமைச்சர்களுக்கு கிடையாது;** சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கிடையாது; ஏன் முதலமைச்சருக்கே சம்பளத் துக்கோ மற்றதுக்கோ நேரடியாக காசோலை யில் பையெழுத்து போடுகிற அதிகாரம் கிடையாது. தேர்ந்தெடுக்கப்பட்ட உங்களுக்குத் தான் அந்த அதிகாரம் இருக்கிறது. அதனால் தான் அதற்குப் பெயர் 'சின்னக் குடியரசு' (Little Republic). எனவே சின்னக் குடியரசைக் கையிலே வைத்திருக்கிற உங்களை அழைத்து, நீங்கள் எல்லாம் சுயாட்சி பெற்று விட்டீர்கள் நாடு சுயாட்சி பெற வேண்டுமென்றால், இவர்களை தயார்படுத்துவோம் என்று உங்களை அழைத்து வந்து மாநில சுயாட்சியை பேச வைத்திருக்கிறார் என்றால் அண்ணா உருவாக்கிய கரு, கலைஞர் கொடுத்த உருவத்திற்கு, உயிர் கொடுக்கப் போகும் இந்தியாவிலேயே ஒரே தலைவர் அது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தான்.

### எது மாநில சுயாட்சி ?

மாநில சுயாட்சி ஒரு காலத்தில் மறுக்கப் பட்டதா? இல்லை. 1946இல் கிரிப்ஸ் என்ற ஒரு வெள்ளைக்கார அமைச்சர் அன்றைக்கு இருந்த இங்கிலாந்து பிரதமர் 'அட்லி' அவர்களால் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். அவருடன் ஒரு குழு வந்தது, அது கிரிப்ஸ் குழு. 'கேபினெட் மிசன்' தமிழில் "அமைச்சரவைக் குழு".

இந்தியாவிற்கு எப்படி சுதந்திரம் தர வேண்டும், இந்து, முஸ்லிம்கள் இருக்கிறார்கள் அவர்கள் எப்படி மோதல் வராமல் வாழ்வது இப்படி ஆய்வு செய்தார்கள். அந்த குழுவிற்கு முன்னால் மூன்று இயக்கங்கள் சென்றது. காங்கிரஸ் இயக்கத்தில் இருந்து யாராவது ஒரு பிரதிநிதி வாருங்கள், முஸ்லிம் லீகில் இருந்து யாராவது ஒருவர் வாருங்கள், princely states சமஸ்தானங்கள் இருந்தது. ஏறக்குறைய 500 க்கும் மேற்பட்ட சமஸ்தானங்கள் இருந்தன. அவர்கள் சார்பாக ஒருவர் வாருங்கள் என்று மூன்று பேரை அழைத்தார்கள்.

அந்த மூன்று பேரில், காங்கிரஸ் சார்பில் அபுல் கலாம் ஆசாத், முஸ்லிம் லீக் சார்பில் ஜனாப் ஜின்னா, சமஸ்தானங்கள் சார்பில் சென்றவர் ஆற்காடு நவாப். இந்தியாவிற்கான சுதந்தரம் எப்படி இருக்க வேண்டும் என்று கூறியவர்கள் மூன்று இஸ்லாமியர்களே தவிர இந்துக்கள் இல்லை. தற்போது இந்தியாவில் இஸ்லாமியர்கள் வாழக்கூடாது என்று குரல் வந்துவிட்டது.

காங்கிரஸ் சார்பில் சென்ற அபுல் கலாம் ஆசாத் அந்த கிரிப்ஸ் குழுவிற்கு முன்னால் கூறிய சாட்சியம் என்ன? இன்றைக்கும் ஆதாரம் இருக்கிறது. என்ன கூறினார், 'We have to re concil the concept of self autonomy of the states without detrimental to the national integrety. Ultimately we came to the conclusion that constitution will be federal in nature.' இந்த வாசகங்கள் அப்படியே இருக்கின்றது.

அபுல் கலாம் ஆசாத் அமைச்சரவையை பார்த்து விட்டு, "நாங்கள் கூறிவிட்டோம் அமைச்சரவைக் குழுவிற்கு, இந்தியாவினுடைய அரசியலமைப்புச் சட்டம் கூட்டாட்சியைத் தான் வலியுறுத்தும். மாநிலங்களுக்கு அனைத்து உரிமைகளும் இருக்கும்" என்று 1946இல் அவர் கூறினார். அது தான் காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு.

இந்த அறிக்கையை அரசியல் நிர்ணய சபையிலே வைக்க வேண்டும். அப்படி வைக்கிற போது, நேருவின் அனுமதியோடு ஒரே ஒரு செய்திக் குறிப்பு வந்தது, "இந்த கிரிப்ஸ் குழுவின் அறிக்கையை ஏற்றுக் கொள்வதும் கொள்ளா ததும் காங்கிரஸ் கட்சியின் உரிமை. ஏனென்றால் எங்களுக்குத் தான் பெரும்பான்மை இருக் கிறது" என்று அறிக்கை வந்தது. இந்த அறிக்கை தான் ஜின்னாவை கோபப்படுத்தியது.

அப்போது ஜின்னா, ஜூலியஸ் சீசர் நாடகத்தின் ஒரு வரியை கூறினார் "Not that I love Caesar less, but I love the country more". 'நான் சீசரை குறைவாக மதிக்கவில்லை. ஆனால் நான் இந்த தேசத்தை அதிகமாக நேசித்ததால் கொன்றேன்' என்று அந்த வரியை கூறினார்.

"நேருவை நம்புகிறேன், காங்கிரசைக் கூட நம்புகிறேன். ஆனால் காங்கிரசிற்குப் பின்னால் இருக்கக் கூடிய இந்துத்துவவாதிகளை நான் நம்பவில்லை. இனிமேல் எங்களுக்கு 'கூட்டாட்சி' வேண்டாம், நாங்கள் கேட்பது பாகிஸ்தான் பிரிவினை" என்று அன்றைக்கு (1947) முஸ்லிம் லீக்கை கூட்டி தீர்மானம் போட்டவர் தான் ஜின்னா என்றார் ஆ. ராசா.

நான் ஏன் இதை கூறுகிறேன் என்றால், மாநில சுயாட்சி வேண்டும் என்று ஒப்புக் கொண்ட ஜின்னாவை மாநில சுயாட்சி வேண்டாம் என்ற காங்கிரசின் அறிக்கையால் பாகிஸ்தான் பிரிந்தது.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# அதிர்ச்சியூட்டும் தகவல்கள்: ஆதரவு முஸ்லீம்களை வைத்து இஸ்லாமிய படுகொலை நடத்துகிறது பா.ஜ.க.

*காங்கிரஸ் கட்சியின் செய்திப் பிரிவுத் தலைவர் பவன் கேரா அளித்துள்ள அதிர்ச்சியான பேட்டி:*

கன்னையா லாலை கொலை செய்த குற்றச்சாட்டில் கைதாகியுள்ள இருவரில் ரியாஸ் அத்தாரி பிரதான குற்றவாளியாக கருதப்படுகிறார். இவர் பாஜக சிறுபான்மை பிரிவில் இருக்கிறார். அதற்கான புகைப்பட ஆதாரம் மற்றும் முக நூல் ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன. பாஜக தலைவர்கள் இர்ஷத் சயின்வாலா, முகமது தாஹிர் ஆகியோருடன் ரியாஸ் அத்தாரி நெருங் கிய தொடர்பில் இருந்துள்ளார். ராஜஸ்தான் பாஜக மூத்த தலைவரும் முன்னாள் அமைச்சருமான குலாப்சந்த் கட்டாரியாவின் நிகழ்ச்சிகளில் எல்லாம் ரியாஸ் அத்தாரி தவறாமல் கலந்து கொண்டுள்ளார்.

இர்ஷத் சயின்வாலா கடந்த 2018 நவம்பர் 30ல் பகிர்ந்த முக நூல் பதிவு, முகமது தாஹிர் 3 பிப்ரவரி 2019, 30 நவம்பர் 2018, 27 அக்டோபர் 2019, ஆகஸ்ட் 10, 2021, நவம்பர் 28, 2019 மற்றும் இன்னும் பிற பதிவுகளில் அத்தாரி பாஜக தலைவர்களுடன் நெருக்கமாக பழகிவந்தது அம்பலமாகியுள்ளது. உதய்பூர் சம்பவத்தில் பிரத மர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் காக்கும் மவுனம், ஒருவேளை நாட் டில் மதமோதல்களை உருவாக்க பாஜக முயல்கிறதோ என்ற எண் ணத்தை உருவாக்குகிறது. அதே போல் பாஜக தனது தலைவர்கள், செய்தித் தொடர்பாளர்கள் மூலம் நாட்டை பிரித்தாள முயற்சிக்கிறதோ என்ற சந்தேகமும் எழுகிறது. அத்தாரிக்கும் பாஜக-வுக்கு மான தொடர்பை எல்லாம் மூடி மறைக்கவே ஒன்றிய அரசு அவசர அவசரமாக வழக்கு விசாரணை யை என்ஐஏ-க்கு மாற்றியதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இவ்வாறு பவன் கேரா கூறி யுள்ளார். ஆனால், “பயங்கரவாதம், தேசப் பாதுகாப்பு விஷயங்களில் இது போன்ற முட்டாள் தனங்களை காங்கிரஸ் நிறுத்திக் கொள்ள வேண்டும்” என்று பாஜக செய்தி பிரிவு தலைவர் அமித் மாளவியா தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அதேபோல், ஜம்மு-காஷ்மீரின் ரியாஸி மாவட்டத்தில் பொது மக்களிடம் பிடிபட்ட லஷ்கர் தீவிரவாதியான உசேன் ஷா, பாஜக நிர்வாகி என விசாரணையில் அம்பலமாகியுள்ளது.

இந்தியா-பாகிஸ்தான் எல்லையான ஜம்மு காஷ்மீர், லடாக், போன்ற பகுதிகளில் தீவிரவாதிகள் போதைப் பொருட்கள் கடத்துவது, ஆயுதங்கள், வெடிபொருட்கள் கடத்துவது போன்ற தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அப்பகுதியில் எல்லை பாதுகாப்பு படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஜம்முகாஷ்மீர் மாநிலம் ரியாஸி மாவட்டம் துக்சான் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதனடிப்படையில் போலீசார் மற்றும் எல்லை பாதுகாப்பு படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது லஷ்கர் இதொய்பா இயக்கத்தை சேர்ந்த 2 தீவிரவாதிகளை போலீசார் கைது செய்துள்ளனர். பிடிபட்ட பயங்கரவாதிகள் பைசல் அகமது தார் மற்றும் தாலிப் உசேன் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இருவரில் ஒருவர் புல்வாமாவை சேர்ந்த ஃபைசல் அகமது, இன்னொருவர் ரஜோரியை சேர்ந்த தலிப் உசேன் ஆகியோராவர். இவர்களில் தலிப் உசேன் பாஜகவில் இணைந்துள்ளார். இவர் பாஜக மூத்த தலைவர்களுடன் இணைந்து புகைப்படங்களை எடுத்துள்ளார். இதுகுறித்து பாஜகவினர் கூறுகையில் பாஜகவில் நிறைய பேர் ஆன்லைன் மூலம் இணைகிறார்கள்.

இதுகுறித்து ஏடிஜிபி தனது ட்விட்டர் பக்கத்தில் கூறுகையில், ரியாஸி மாவட்டம் துக்சான் கிராமத்தில் உள்ள மக்களுக்கு பாராட்டுகள். ஆயுதங்கள் சுற்றித் திரிந்த இரு தீவிரவாதிகளை பிடித்துக் கொடுத்துள்ளார்கள். அவர்களுக்கு ரூ. 2 இலட்சம் சன்மானம் வழங்கப் படுவதாக டிஜிபி அறிவித்துள்ளார் என ஏடிஜிபி தெரிவித்துள்ளார்.

## களப்பணியாளர்களுக்கு 3 நாள் பயிற்சி முகாம்: முக்கிய அறிவிப்பு

திராவிடர் விடுதலைக் கழகக் களப்பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் ஜூலை 23, 24, 25 தேதிகளில் திருச்சி ‘டி.எம்.எஸ்.எஸ்.’ பயிற்சி மய்யத்தில் (தொடர் வண்டி நிலையம் அருகில்) நடைபெறுகிறது.

சமூக நீதி – மதவாதம் – பெண்ணுரிமை – மாநில சுயாட்சி, சமூகம், உளவியல் எனும் பல்வேறு தலைப்புகளில் பயிற்சியளிக்கப் படும்.

தேர்வு செய்யப்பட்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

தேர்வு செய்யப்பட்டோருக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்படும்.

பயிற்சியாளர்கள் ஜூலை 22 இரவே மய்யத்திற்கு வந்து சேர வேண்டும்.

– கொளத்தூர் மணி
(தலைவர்)
விடுதலை இராசேந்திரன்
(பொதுச் செயலாளர்)

## திருச்சியில் ஒரு நாள் இணையதள பயிலரங்கம்!

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கழகத் தோழர்களுக்கான ஒருநாள் இணையதள பயிலரங்கம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

நாள் : 22.07.2022 வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 9:30 முதல் மாலை வரை
இடம் : TMSSS நிறுவன பயிற்சி அரங்கம், திருச்சி.

சமூக வலைத்தளங்களில் இயங்கும் மற்றும் இயங்க ஆர்வம் உள்ள திராவிடர் விடுதலை கழகத் தோழர்களுக்கு மட்டுமான ஒருநாள் பயிலரங்கம்.

இணையதளம், சமூக வலைத்தளங்கள் குறித்த அறிமுகம், அவை இயங்கும் விதங்கள், எளிமையாக பயன்படுத்துவதற்கான வழிகள், தொழில் நுட்பம் சார்ந்த விளக்கங்கள் ஆகியவை குறித்து கழகத்தின் இணையதள செயல்பாட்டாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் விளக்கம் அளிக்க உள்ளார்கள்.

நுழைவுக் கட்டணம் ரூபாய் 100/- (நூறு ரூபாய் மட்டும்)

முன் பதிவிற்கு :

பரிமளராசன் – 7871962024
சமூக ஊடக பொறுப்பாளர், திராவிடர் விடுதலைக் கழகம்.

விஜயகுமார்
இணையதள பொறுப்பாளர், திராவிடர் விடுதலைக் கழகம்.

## மதுரையில் கழக சார்பில் மேலவளவு போராளிகள் நினைவு நாள்

மேலவளவு ஜாதி ஒழிப்புப் போராளிகளின் 25ஆம் ஆண்டு நினைவேந்தலையொட்டி மதுரை திவிக சார்பில் மாவட்ட செயலாளர் மா.பா. மணிஅமுதன் தலைமையில் இரு சக்கர வாகன பேரணி நடைபெற்றது.

மேலவளவு போராளிகளின் நினைவிடத்தில் மாலையணி வித்துக் கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டது.

மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி முன்னிலை வகித்தார். புலிப்பட்டி கருப்பையா, காளி உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.250
தொடர்புக்கு : ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 8th July 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN